TNRM010016612024

முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்

**முன்னிலை: திரு.ஏ.கே. மெஹபூப் அலிகான்,** B.L.M., L.L.M., PG.D.PM/IR., Dip.in.J.J & J.Psy.,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

2024 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 12–ம் நாள் வியாழக்கிழமை
இடைநிலை மனு எண். 2/2024
இன்
ஓ.எஸ். எண் 41/2024
***

அப்துல்மஜீது, வயது சுமார் 72, த/பெ. முகம்மது யூசுப், க.எண்.1/995, ஓம்சக்தி நகர், அரண்மனைச்சாலை, இராமநாதபுரம், இராமநாதபுரம் வட்டம், இராமநாதபுரம் மாவட்டம்.

மனுதார்/வாதி

/எதிர்/

தனபால், வயது சுமார் 55, த/பெ. நாச்சியப்பன், க.எண்.94, அ.நெடுங்குளம் கிராமம், ரெகுநாதமடை அஞ்சல், இளையான்குடி வட்டம், சிவகங்கை மாவட்டம்.

எதிர்மனுதார்/2 ம் பிரதிவாதி

இம்மனுவானது உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் ஆர்டர் 39 ரூல் 1 மற்றும் 2 ன்கீழ் எதிர்மனுதார் மனுச்சொத்தினை பொறுத்து எவ்வித கிரயம் முதலான வில்லங்கமும் செய்யாதிருக்கம்படிக்கு மேற்படியாருக்கு எதிரான இம்மனு முடியும்வரை Ad Interim ஆகவும், வழக்கு முடியும் வரை Interim ஆகவும் உறுத்துக்கட்டளை உத்தரவு வழங்கி நீதி செலுத்த வேண்டுமாய் வாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள்: 21.03.2024 & 27.03.2024.

TNRM010016612024

மனுவில் ரூ.20/− நீதிமன்றக்கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனுவானது 12.12.2024ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதார் தரப்பில் வழக்கறிஞர் திரு.P. நடராஜன் B.Sc.,B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதார் தரப்பில் வழக்கறிஞர் திரு.P. பாக்கியம் B.Sc.,B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்ருரை தாக்கல் செய்யப்படாததாலும் எதிர்மனுதாரரை அழைத்தும் ஆஜரில்லாத நிலையில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

<u>தீர்ப்பாணை உத்தரவு</u>

1) எதிர்மனுதாரரை அழைத்தும் ஆஜரில்லாததாலும் எதிருரை தாக்கல் செய்யப்படாததாலும் இந்த மனு அனுமதிக்கப்படுகிறது.

2) செலவுத்தொகை பற்றி உத்தரவு இல்லை.

**<u>சொத்து விபரம்</u>**

இராமநாதபுரம் மாவட்டம், மேற்படி தாலுகா, இராமநாதபுரம் வெளிப்பட்டிணம் சப்டிவிசன், பட்டிணம்காத்தான் குரூப், பட்டிணம்காத்தான் கிராமத்தில் பழைய பட்டா நிர் 728 சர்வே எண் 326/4 க்கு ஏக்கர் 1.32 ல் வடபுரம் மேல்புரம் செண்ட் 6 க்கு கிழமேலடி 49, மேல்புரம் தென்வடலடி 53.1/2 கீழ்புரம் தென்வடலடி 54 அளவுள்ள சதுரடி 2633.3/4 இதன் தற்போதைய பட்டா எண் 2276 நத்தம் சர்வே எண் 326/4ஏ தற்போதைய உட்பிரிவு சர்வே எண் 326/4ஏ1பி சொத்து (ஷை சொத்து பிரதிவாதிகளின் கிரய ஆவணங்களில் சர்வே எண் 326/4ஏ எனக்காட்டடப்பட்டுள்ளது) இதன் நான்குமால்.

| | |
|---|---|
| வடக்கு | சர்வே எண் 326/3 பரிதாபேகம் கிரைய நிலம் தற்போது சாலியாபீவி வீடு |
| கிழக்கு | முன்பு ஜனூல்பரிதா கிரைய பிளாட் எண் 7, 8 நிலம் தற்போது |

TNRM010016612024

ஹாஜா முகைதீன் கிரய நிலம் (பிரதிவாதிகளின் கிரய ஆவணங்களில் A.சீனி முகமது நிலம் என்று தவறுதலாக காட்டப்பட்டுள்ளது.)

| | |
|---|---|
| தெற்கு | செ. முத்துக்காதரால் விடப்பட்ட 15 அடி அகல கிழமேல் பொதுப்பாதை |
| மேற்கு | முன்பு டி. குஞ்சு துரை தேவர் கிரைய நிலமாக இருந்து பின்னீடு சர்வே எண் 326/8 ஏ 5, 326/8 ஏ 6 என உட்பிரிவு செய்யப்பட்ட சொத்தில் உள்ள முனாப் வீடு. |

2024ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 12ம் நாளான இன்று என்னால் கையெழுத்திடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையுடன் தீர்ப்பாணை உத்தரவு வழங்கப்படுகிறது.

**ஒப்பம்/திரு.ஏ.கே. மெஹபூப் அலிகான்,**
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

**முதன்மை மாவட்ட நீதிமன்றம்,**
**இராமநாதபுரம்**
**இடைநிலை மனு எண்.2/2024**
**இன்**
**ஓ.எஸ்.எண் 41/2024**
**தீர்ப்பாணை உத்தரவு**
**நாள் 12.12.2024**